## விரைவு நீதிமன்றம் (ந.வ), உத்தமபாளையம்

**முன்னிலை: திரு.S.அமலநாத கமலக்கண்ணன், B.A.,B.L.,Hon's.,**
நீதித்துறை நடுவர், விரைவு நீதிமன்றம்,
உத்தமபாளையம்.

2026–ஆம் ஆண்டு ஜீலை திங்கள் 31–ஆம் நாள் வெள்ளிக்கிழமை

**சுருக்குமுறை ஆவண வழக்கு எண்.112/2024**

CNR.No.TNTH080025512024

| | |
|---|---|
| புகார்தாரர் | ச.சுப்புராஜ் (வயது 57/2026),<br>த/பெ.சங்கப்ப கவுண்டர்,<br>வார்டு–1, ரைஸ்மில் தெரு,<br>கன்னிசேர்வைபட்டி,<br>உத்தமபாளையம் தாலுகா, தேனி மாவட்டம். |
| எதிரி | த.அருண்குமார் (வயது 37/2026),<br>த/பெ.தர்மர்,<br>28F, ராதாகிருஷ்ண ரைஸ்மில் தெரு,<br>சின்னமனூர்,<br>உத்தமபாளையம் தாலுகா, தேனி மாவட்டம். |
| குற்றம் முறையிட்டது | மாற்று முறை ஆவணச் சட்டம் பிரிவுகள் 138, 142–ன் கீழ் |
| காசோலை எண். (000004) | 01.03.2024 |
| காசோலை தொகை | Rs.1,50,000/- |
| வசூலுக்கு தாக்கல் செய்த நாள்கள் | 01.03.2024. 24.05.2024 |
| காசோலை திரும்பிய நாள்கள் | 06.03.2024. 27.05.2024 |
| காசோலை திரும்பிய காரணம் | Funds Insufficient |
| அறிவிப்பு அனுப்பிய நாள்கள் | 20.03.2024, 28.05.2024 |
| அறிவிப்பு பெறப்பட்ட நாள்கள் | 23.03.2024, 29.05.2024 |
| வழக்கு தாக்கல் நாள் | 27.06.2024 |
| தீர்ப்பு நாள் | 31.07.2026 |
| புகார்தாரர் தரப்பு வழக்கறிஞர் | திரு.A.ஜார்ஜ் |



AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.07.31 13:13:46 +0530

| | |
|---|---|
| எதிரி தரப்பு வழக்கறிஞர் | திரு.P.மகேஸ்வரன் |
| **தீர்வு** | எதிரி ஆஜர். **எதிரி மாற்றுமுறை ஆவண சட்டம் பிரிவு 138–ன் கீழ் குற்றவாளி என முடிவு செய்து B.N.S.S பிரிவு 278(2)ன் கீழ் தீர்ப்பளிக்கப்படுகிறது.** |

இருதரப்பு வாதம் கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்,

**தீர்ப்புரை**

1. **புகார்தாரர் வழக்கு சுருக்கம்:**

புகார்தாரரும், எதிரியும் கடந்த 3 வருடங்களாக பழக்கமானவர்கள். எதிரி லாரி தொழில் செய்து வருகிறார். எதிரி அவசர தொழிலுக்காக புகார்தாரரிடம் பணம் கேட்டுள்ளார். புகார்தாரர் கடந்த 04.02.2024 ம் தேதி ரூ.1,50,000/–ஐ தனது வீட்டில் வைத்து எதிரிக்கு ரொக்கமாக கொடுத்துள்ளார். அதற்கு ஆதரவாக 01.03.2024 நாளிட்ட 000004 என்ற எண் கொண்ட சிட்டி யூனியன் வங்கி, சின்னமனூர் கிளைக்குரிய ரூ.1,50,000/–த்திற்கான காசோலையை கொடுத்துள்ளார். அந்த காசோலையை பணமாக்கும் பொருட்டு புகார்தாரர் தான் கணக்கு வைத்துள்ள ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா வங்கி, தேனி கிளையில் 01.03.2024 ம் தேதியன்று வசூலுக்கு தாக்கல் செய்துள்ளார். மேற்படி காசோலையானது "Funds Insufficient" என்ற காரணத்தினால் மதிப்பு மறுக்கப்பட்டு 06.03.2024 அன்று திரும்பியது. காசோலை தொகையை கேட்டு எதிரிக்கு 20.03.2024 நாளிட்டு அனுப்பிய சட்ட அறிவிப்பை 23.03.2024 ம் தேதி எதிரி பெற்றுகொண்டுள்ளார். மீண்டும் எதிரி கேட்டுக்கொண்டதற்கிணங்க மேற்படி காசோலையை புகார்தாரர் தான் கணக்கு வைத்துள்ள இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, உத்தமபாளையம் கிளையில் 24.05.2024 ம் தேதியன்று வசூலுக்கு தாக்கல் செய்துள்ளார். மேற்படி காசோலையானது "Funds Insufficient" என்ற



AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.07.31 13:13:54 +0530

காரணத்தினால் மதிப்பு மறுக்கப்பட்டு 27.05.2024 அன்று திரும்பியது. காசோலை தொகையை கேட்டு எதிரிக்கு 28.05.2024 நாளிட்டு அனுப்பிய சட்ட அறிவிப்பை 29.05.2024 ம் தேதி எதிரி பெற்றுகொண்டு, பணம் செலுத்தாமல் இருந்துள்ளார். மேலும் எதிரி காசோலையின் தொகையை செலுத்தாமல் புகார்தாரரை மோசடி செய்து ஏமாற்றும் நோக்கத்துடன் செயல்பட்டதால் எதிரி மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவுகள் 138 மற்றும் 142ன் கீழ் குற்றம் இழைத்துள்ளார் என்பதால் எதிரியை தண்டிக்க வேண்டி இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளார்.

**2.** புகார்தாரர் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலம், புகார்மனு ஆவணங்களை பரிசீலனை செய்து பார்த்ததில் எதிரிக்கு எதிராக வழக்கு விசாரணைக்கு உத்தரவிட முதல் தோற்ற ஆதாரம் இருந்ததால் எதிரிக்கு பிரிவு 227 B.N.S.S-ன் கீழ் அழைப்பாணையுடன் இணைத்து புகார் நகல் அனுப்பப்பட்டது.

**3.** எதிரி அழைப்பாணையையும், புகார் நகலையும் பெற்றுக்கொண்டு நீதிமன்றத்தில் ஆஜரானதும் எதிரியிடம் B.N.S.S பிரிவு 274-ன் படி குற்றத்தின் சாரம்சம் குறித்து கேள்வி கேட்கப்பட்டது "பொய் வழக்கு" என்றும், எதிரி குற்றத்தை மறுத்து விசாரணை செய்ய வேண்டும் என்று கூறியுள்ளார்.

**4. புகார்தாரர் தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள்:**

4.1. புகார்தாரர் திரு.சுப்புராஜ் தனது புகாரில் கூறியுள்ள சங்கதிகளை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்து அது ம.சா.1 முதல் விசாரணை சாட்சியமாக பதிவு செய்யப்பட்டுள்ளது. எதிரி கொடுத்த 01.03.2024-ம் தேதியிட்ட 000004 என்ற எண் கொண்ட சிட்டி யூனியன் வங்கி, சின்னமனூர் கிளைக்குரிய ரூ.1,50,000/-க்கான அசல் காசோலை ம.சா.ஆ.1 ஆகவும், மேற்படி காசோலை "Funds Insufficient" என்ற காரணத்தினால் மதிப்பு மறுக்கப்பட்டு 06.03.2024ம் தேதியன்று திரும்பியதற்கான வங்கி குறிப்புரை அசல் ம.சா.ஆ.2 ஆகவும்,



AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.07.31 13:14:01 +0530

மேற்படி காசோலைக்குரிய தொகையை கேட்டு எதிரிக்கு அனுப்பிய 20.03.2024 நாளிட்ட சட்ட அறிவிப்பு அலுவலக நகல் ம.சா.ஆ.3 ஆகவும், மேற்படி அறிவிப்பை எதிரி RT443349620IN என்ற பதிவு தபால் 23.03.2024 ம் தேதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக இணையதள பதிவிறக்க நகல் ம.சா.ஆ.4 ஆகவும், மேற்படி காசோலை "Funds Insufficient" என்ற காரணத்தினால் மதிப்பு மறுக்கப்பட்டு 27.05.2024 ம் தேதியன்று திரும்பியதற்கான வங்கி குறிப்புரை அசல் ம.சா.ஆ.5 ஆகவும், மேற்படி காசோலைக்குரிய தொகையை கேட்டு எதிரிக்கு அனுப்பிய 28.05.2024 நாளிட்ட சட்ட அறிவிப்பு அலுவலக நகல் ம.சா.ஆ.6 ஆகவும், மேற்படி அறிவிப்பை எதிரி RT510793878IN என்ற பதிவு தபால் 29.05.2024 ம் தேதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக கணினி ரசீது நகல் அசல் ம.சா.ஆ.7 ஆகவும் ம.சா.1 குறியீடு செய்துள்ளார்.

4.2. புகார்தாரருக்கு ஆதரவாக ம.சா.2 ஆன தங்கவேல் சாட்சியம் அளித்துள்ளார். ம.சா.2 தனது சாட்சியத்தில், 25.07.2024 ம் நாளிட்ட எதிரியின் காசோலையை ம.சா.ஆ.8 ஆகவும், 01.08.2024 நாளிட்ட எதிரியின் காசோலையை ம.சா.ஆ.9 ஆகவும், 09.05.2025 நாளிட்ட வழக்கறிஞர் மூலம் அனுப்பிய அறிவிப்பு ம.சா.ஆ.10 ஆகவும், 15.05.2025 நாளிட்டு எதிரிக்கு கிடைக்கப்பெற்றதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டையை ம.சா.ஆ.11 ஆகவும் தாக்கல் செய்துள்ளார்.

5. <u>பிரிவு 351(1)(b) வினா மற்றும் பதில்:</u>

புகார்தாரர் தரப்பில் விசாரிக்க கூடுதல் சாட்சியம் இல்லை என மேற்குறிப்பு செய்ததால் புகார்தாரர் தரப்பு சாட்சியத்தில் எதிரிக்கு பாதகமாக உள்ள அம்சங்களை தொகுத்து BNSS பிரிவு 351(1)(ஆ)–ன் கீழ் வினவிய போது புகார்தாரர் தரப்பு சாட்சியத்தை பொய் வழக்கு என்றும், புகார்தாரரை தெரியாது என்றும், ம.சா.ஆ.1.ஆன காசோலை தன்னுடையதுதான் என்றும், அதிலுள்ள



AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.07.31 13:14:09 +0530

கையொப்பம் தன்னுடையது இல்லை என்றும், தனது தரப்பில் விசாரிக்க சாட்சி இல்லை என்றும் கூறினார்.

**6. எதிரி தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள்:**

6.1. எ.சா.1 திரு.அருண்குமார் தனது சாட்சியத்தில், புகார்தாரரை எனக்கு தெரியாது. காசோலையை புகார்தாரரிடம் நான் கொடுக்கவில்லை. நீதிமன்றத்திற்கு வந்த பிறகு எனது சங்கத்தில் ஆட்கள் மூலம் விசாரித்தபோது காசோலை எனது மாமியார் போதுமணி மூலம் புகார்தாரரிடம் சென்றது என்பதை தெரிந்து கொண்டேன். நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்த பிறகு காவல் நிலையத்தில் புகார் கொடுக்க சென்றபோது நீதிமன்றத்தில் பார்த்து கொள்ளும்படி போலீசார் கூறிவிட்டார்கள். புகார்தாரருக்கும், எனக்கும் எந்த வரவு செலவும் இல்லை என்று சாட்சியம் அளித்துள்ளார்.

6.2. எ.சா.2 திருமதி.போதுமணி தனது சாட்சியத்தில், எதிரி எனது மருமகன் ஆவார். கடந்த இரண்டரை வருடத்திற்கு முன்பு நான் சுப்புராஜிடம் ரூ.5 ஆயிரம் வாங்கினேன். அதற்கு ரூ.7,500/– திருப்பி செலுத்தினேன். அதன் பின்னர் சுப்புராஜிடம் ரூ.10 ஆயிரம் வாங்கி ரூ.15 ஆயிரம் திருப்பி கொடுத்துவிட்டேன். நான் பத்தாயிரம் வாங்கியபோது எனது மருமகன் அருண்குமாரின் காசோலையை சுப்புராஜிடம் கொடுத்தேன். பணத்தை திருப்பி கொடுத்துவிட்டு காசோலையை கேட்டபோது பார்த்து தருவதாக கூறி தற்போது வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**7. புகார்தாரர் தரப்பு வாதம்:**

கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், புகார்தாரர் அவரது சாட்சியத்தின் மூலமும், ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.11 வரையிலான ஆவணங்கள் மூலமும், எதிரி மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டுள்ளது. ம.சா.ஆ.1 ஆன காசோலை மற்றும் அதிலுள்ள கையொப்பமும் தன்னுடையது இல்லை என்று எதிரி நிரூபிக்காத காரணத்தினால் மாற்றுமுறை ஆவணச் சட்டத்தின் அனுமானங்கள் புகார்தாருக்கு ஆதரவாக உள்ளது. எதிரியின் சரியான


AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.07.31 13:14:18 +0530

முகவரிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது. ஆனால், எதிரி பதில் அறிவிப்பு அனுப்பவில்லை. புகார்தாரர் வழக்கினை ஆதரிக்கும் வகையில் ம.சா.2 சாட்சியம் அளித்துள்ளார். எதிரி மற்றும் அவரது மாமியாரான எ.சா.2 முன்னுக்குபின் முரணாக சாட்சியம் அளித்துள்ளார்கள். எ.சா.2 ன் மீது எதிரி எவ்வித சட்ட நடவடிக்கையும் எடுக்கவில்லை. எதிரி தரப்பு வாதத்தை நிரூபிக்கும் வகையில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் தாக்கல் செய்யவில்லை. புகார்தாரருக்கு ஆதரவாக இருக்கும் அனுமானங்கள் எதிரி தரப்பில் மறுக்கப்படவில்லை என்றும், எனவே எதிரி மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டுள்ளது என்ற வாதத்தினை முன்வைத்தார்.

8. <u>எதிரி தரப்பு வாதம்:</u>

எதிரி தரப்பில் எழுத்துப்பூர்வமான வாதுரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், எதிரி புகார்தாரரிடம் ரூ.1,50,000/- கடன் வாங்கவில்லை. எதிரியின் மாமியார் எ.சா.2 வாங்கிய கடனுக்கு ஆதரவாக எதிரிக்கு தெரியாமல் அவரது காசோலையை எடுத்து புகார்தாரரிடம் கொடுத்துள்ளார். அதனை வைத்து புகார்தாரர் பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளார். புகார்தாரர் கேட்டுகொண்டதன்பேரில் எ.சா.2 சாட்சியம் அளித்துள்ளார். புகார்தாரர் அனுப்பியதாக சொல்லப்படும் வழக்கறிஞர் அறிவிப்பு எதிரிக்கு சார்பு செய்யவில்லை என்பதால்தான் பதில் அறிவிப்பு அனுப்பவில்லை. புகார்தாரர் வட்டிக்கு பணம் கொடுக்கும் தொழில் செய்கிறார். வழக்கின் எண்ணை குறித்து புகார்தாரர் தவறாக கூறியுள்ளார். எ.சா.2 ஐ புகார்தாரருக்கு தெரியும் என்று ஒப்புக்கொண்டுள்ளார். எதிரி புகார்தாரரிடம் கடன் பெறவில்லை என்பதால் காசோலை தொகையை செலுத்த கடமைப்பட்டவர் இல்லை. ஆகையால் புகார்தாரருக்கு ஆதரவாக இருப்பதாக கூறப்படும் அனுமானங்கள் மறுக்கப்பட்டுள்ளது என்பதால் எதிரிக்கு எதிராக பிரிவு 138 மாற்றுமுறை ஆவணச்சட்டத்தின் கீழ் தண்டிக்க இயலாது என்ற வாதத்தை முன்வைத்தார்.



AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.07.31 13:14:26 +0530

**9.** சான்றாவணங்கள் மற்றும் இதர வழக்கு ஆவணங்கள் கவனமாக பரிசீலிக்கப்பட்டு கருத்தில் எடுத்து கொள்ளப்பட்டது.

**10.** இவ்வழக்கில் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றமான மாற்றுமுறை ஆவண சட்ட பிரிவு 138-ன் படி சந்தேகத்திற்கு இடமின்றி நிருபிக்கப்பட்டுள்ளதா ? என்பது தீர்விற்குரிய பிரச்சனையாகும்.

10.1. எதிரி மீதான குற்றத்தை நிரூபிக்க பிரிவு 138 மாற்றுமுறை ஆவணச் சட்டத்தின் உட்கூறுகள் நிரூபிக்கப்பட்டிருக்க வேண்டும்.

- முதலில் எதிரி, புகார்தாரருக்கு 01.03.2024-ம் தேதியிட்டு ரூ.1,50,000/-க்கு கொடுத்த சிட்டி யூனியன் வங்கி, சின்னமனூர் கிளைக்குரிய ம.சா.ஆ.1 காசோலையானது உரிய காலத்திற்குள் வங்கியில் வசூலுக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
- மேற்படி காசோலையானது கடந்த 27.05.2024ம் தேதியன்று Funds Insufficient என்ற காரணத்தினால் மதிப்பு மறுக்கப்பட்டு இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, உத்தமபாளையம் கிளையிலிருந்து திருப்பப்பட்டது என்பது ம.சா.ஆ.5 ஆவணத்தின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.
- காசோலை திரும்பியது குறித்து 28.05.2024-ம் தேதியன்று புகார்தாரர் அவரது வழக்கறிஞர் மூலம் உரிய காலத்திற்குள் எதிரிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளது ம.சா.ஆ.6 ஆவணத்தின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.
- மேற்படி அறிவிப்பை 29.05.2024-ம் தேதியன்று எதிரி பெற்று கொண்டதற்கான அஞ்சலக கணினி ரசீது நகல் ம.சா.ஆ.7 ஆவணத்தின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

அதன்பின்னர் எதிரி 15 நாட்களுக்குள் பணம் செலுத்தாமல் இருந்ததால் உரிய காலத்திற்குள் புகார்தாரர் இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளார்.



AMALANATHA KAMALAKANNAN S Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S Date: 2026.07.31 13:14:33 +0530

10.2. தற்போது தாவா காசோலையானது எதிரியின் காசோலைதானா? என்றும், எதிரி தன்னுடைய சட்டப்படியான கடனை தீர்க்க தான் புகார்தாரருக்கு தாவா காசோலையை கொடுத்தாரா? என்பதை பரிசீலனை செய்கையில், தாவா காசோலையிலுள்ள கையொப்பத்தை குறித்து பிரிவு 351(1)(b)–BNSS–ன் கீழ் எதிரியிடம் கேள்வி கேட்டபோது, காசோலையிலுள்ள கையொப்பம் தன்னுடையது இல்லை என எதிரி கூறியுள்ளார். ஆனால் காசோலையை வங்கியில் வசூலுக்கு தாக்கல் செய்தபோது, காசோலையில் கையொப்பம் மாற்றம் (Signature differs) என்ற காரணம் குறிப்பிட்டு திருப்பப்படாமல், Funds Insufficients என்ற காரணம் குறிப்பிட்டுதான் திருப்பப்பட்டுள்ளது.

10.3. எதிரியின் மற்ற இரண்டு காசோலைகள் ம.சா.2 ன் மூலம் ம.சா.ஆ.8 மற்றும் ம.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி காசோலைகளில் உள்ள கையொப்பமானது தன்னுடையது இல்லை என்று எதிரி மறுத்துள்ளார். ஆனால் எதிரியின் காசோலைகளில் உள்ள கையொப்பமானது தன்னுடைய கையொப்பம் இல்லை என்பதை நிரூபிக்கும் வகையில் எதிரி தரப்பில் எவ்வித முயற்சிகளும் எடுக்கவில்லை. எனவே காசோலையிலுள்ள கையொப்பமானது எதிரியின் கையொப்பம்தான் என்று தீர்மானிக்கிறது. ஆகையால், மாற்றுமுறை ஆவணச் சட்டப்பிரிவு 118 (a)–ன்படி வழக்கு காசோலை மறுபயனுக்காகத்தான் கொடுக்கப்பட்டுள்ளது என்று புகார்தாரருக்கு ஆதரவாக அனுமானம் நிலவுகிறது. மேலும், K.Bhaskaran Vs. Sankaran Vaidhyan Balan (1999 (4) RCR (Criminal) 309) என்ற மாண்புமிகு உச்சநீதிமன்ற தீர்ப்பின்படி, எதிரி காசோலையில் உள்ள கையொப்பத்தை மறுக்கப்படவில்லை என்பதால் மாற்றுமுறை ஆவண சட்ட பிரிவு 139–ன் படி காசோலையானது சட்டப்படியான கடனை தீர்ப்பதற்காக கொடுக்கப்பட்டதுதான் என்று புகார்தாரருக்கு ஆதரவாக அனுமானம் நிலவுகிறது.

10.4. மேற்கண்ட அனுமானங்கள் புகார்தாரருக்கு ஆதரவாக இருக்கும் பட்சத்தில் எதிரி தரப்பில் மறுக்ககூடிய அனுமானங்கள் ஆகும். Basalingappa Vs



AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.07.31 13:14:40 +0530

mudibasappa என்ற மாண்புமிகு உயர்நீதிமன்ற தீர்ப்பின்படி எதிரி தனது தரப்பு சாட்சியங்களை முன் நிறுத்துவதன் மூலமாகவோ அல்லது புகார்தாரர் சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்தோ Pre-Ponderance of probability என்ற அடிப்படையில் தனது தரப்பிற்கு ஆதரவாக எதிர்வாதத்திற்குரிய சந்தேகத்தை ஏற்படுத்துவதன் மூலம் மறுக்கலாம்.

10.5. மேற்படி அனுமானங்கள் புகார்தாரருக்கு ஆதரவாக இருக்கும் நிலையில், எதிரி தரப்பில் இருந்து மறுக்கப்படும் விபரங்கள் யாதெனில்,

"எதிரி புகார்தாரரிடம் ரூ.1,50,000/- கடனாக வாங்கவில்லை. எதிரியின் மாமியார் எ.சா.2 போதுமணி புகார்தாரரிடம் வாங்கிய கடனுக்கு ஆதரவாக எதிரிக்கு தெரியாமல் அவரது காசோலையை எடுத்து புகார்தாரரிடம் கொடுத்துள்ளார். மேற்படி காசோலையை வைத்து புகார்தாரர் பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளார்" என்று புகார்தாரரின் வழக்கினை மறுத்து எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது.

10.6. புகார்தாரரின் வழக்கை நிரூபிக்கும் வகையில், ம.சா.ஆ.1 ஆன எதிரியின் காசோலையை புகார்தாரர் தாக்கல் செய்துள்ளார். தாவா காசோலை வங்கியிலிருந்து மறுக்கப்பட்ட பின்னர் புகார்தாரர் எதிரிக்கு முதலில் ஒரு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளார். அதன்பின்னர் ம.சா.2 ஆன தங்கவேல் மூலம் புகார்தாரரிடம் சமரச பேச்சுவார்த்தை பேச கோரி எதிரி இரண்டு காசோலைகள் ம.சா.2 யிடம் கொடுத்துள்ளார். அதன் பின்னர் எதிரி கேட்டுக்கொண்டதன்பேரில் ம.சா.ஆ.1 ஆன காசோலையை மீண்டும் 24.05.2024 ம் தேதியன்று புகார்தாரர் வங்கியில் வசூலுக்கு தாக்கல் செய்துள்ளார். மேற்படி காசோலையானது திரும்பிய பின்னர் எதிரியின் முகவரியான 28F, ராதாகிருஷ்ணன் ரைஸ்மில் தெரு, சின்னமனூருக்கு புகார்தாரர் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியும், அதன் அஞ்சலக ரசீதை தாக்கல் செய்துள்ளார்



AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.07.31 13:14:50 +0530

10.7. மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதற்கு ஒப்புதல் அட்டை திரும்ப வரவில்லை என்று கூறி RT510793878IN என்ற இணையதள பதிவிறக்க நகலை எ.சா.ஆ.7 ஆக புகார்தாரர் தாக்கல் செய்துள்ளார். மேற்படி ஆவணத்தை பரிசீலனை செய்கையில், எதிரியின் முகவரிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு சார்பு செய்யப்பட்டதாக குறிப்பிட்டுள்ளது. ஆனால் எதிரி மேற்படி முகவரியில் குடியிருக்கவில்லை என்றும், குருசாமி நகரில் குடியிருப்பதாகவும், புகார்தாரர் அனுப்பிய அறிவிப்பு தனக்கு கிடைக்கவில்லை என எதிரி சாட்சியம் அளித்துள்ளார்.

10.8. எதிரியின் ஆதார் அட்டை மற்றும் ரேசன் அட்டையில் உள்ள முகவரிக்குதான் புகார்தாரர் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய எதிரியின் சாட்சியத்தின் மூலம் தெரியவருகிறது. மேலும் புகார்தாரருக்கும், எதிரிக்கும் இடையே சமரச பேச்சுவார்த்தை செய்து வைத்ததாக சொல்லப்படும் ம.சா.2 தங்கவேல் இருதரப்பினர்களுக்கிடையே பேச்சுவார்த்தை செய்து வைத்ததை குறித்தும், ம.சா.ஆ.8 மற்றும் ம.சா.ஆ.9 ஆன காசோலைகளை எதிரி கொடுத்ததை குறித்து எதிரியின் முகவரியான ராதாகிருஷ்ணன் ரைஸ்மில் தெரு, சின்னமனூருக்கு ம.சா.ஆ.10 ஆன வழக்கறிஞர் அறிவிப்பை அனுப்பியுள்ளார். அதனை எதிரியின் தாயாரான பேச்சியம்மாள் பெற்று கொண்டதாக கூறி ம.சா.ஆ.11 ஆன ஒப்புதல் அட்டையை எ.சா.2 தாக்கல் செய்துள்ளார்.

10.9. மேலும் எதிரி அவரது பெற்றோர்களான பேச்சியம்மாள் மற்றும் தர்மருடன் ஒன்றாக சந்தோஷமாக இருந்து வருகிறார் என்றும், எதிரியின் பெற்றோர்கள் ராதாகிருஷ்ணன் ரைஸ்மில் தெரு, சின்னமனூரில் குடியிருந்து வருகிறார்கள் என்று எதிரியின் மாமியார் எ.சா.2 கூறியுள்ளார். ம.சா.2 தங்கவேல் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை எதிரியின் தாயார் பெற்று கொண்ட நிலையில், புகார்தாரர் அனுப்பிய அறிவிப்பை பெறவில்லை என எதிரி கூறுவது ஏற்புடையதாக இல்லை என்று முடிவு செய்கிறது. மேலும் எதிரி



AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.07.31 13:14:59 +0530

ராதாகிருஷ்ணன் ரைஸ்மில் தெருவில் வசிக்கவில்லை என்றும், குருசாமி நகரில் வசித்து வருகிறார் என்பதை நிரூபிக்கும் வகையில் அவரது தரப்பில் எவ்வித ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை. ஆகையால் புகார்தாரர் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு தனக்கு சார்பு செய்யவில்லை என்று எதிரி தரப்பில் நிரூபிக்கவில்லை என்று முடிவு செய்கிறது. புகார்தாரர் அனுப்பிய அறிவிப்புகளை எதிரி பெற்ற பிறகும் பதில் அறிவிப்பு அனுப்பாமல் அமைதி காத்துள்ளார்.

10.10. எதிரி தானாக முன்வந்து தன்னை எ.சா.1 ஆக விசாரணை செய்துள்ளார். எதிரி அவரது சாட்சியத்தில், புகார்தாரரை எனக்கு தெரியாது. காசோலையை புகார்தாரரிடம் நான் கொடுக்கவில்லை. நீதிமன்றத்திற்கு வந்த பிறகு எனது சங்கத்தில் ஆட்கள் மூலம் விசாரித்தபோது காசோலையை எனது மாமியார் போதுமணி மூலம் புகார்தாரரிடம் சென்றது என்பதை தெரிந்து கொண்டேன். நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்த பிறகு காவல் நிலையத்தில் புகார் கொடுக்க சென்றபோது நீதிமன்றத்தில் பார்த்து கொள்ளும்படி போலீசார் கூறிவிட்டார்கள். புகார்தாரருக்கும், எனக்கும் எந்த வரவு செலவும் இல்லை என்று சாட்சியம் அளித்துள்ளார்.

10.11. எதிரியின் மாமியாரான போதுமணி என்பவரை எ.சா.2 ஆக எதிரி தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ளது. எ.சா.2 அவரது சாட்சியத்தில், புகார்தாரரிடம் அவர் வாங்கிய ரூ.10 ஆயிரம் தொகைக்காக எதிரியின் காசோலையை அவருக்கு தெரியாமல் எடுத்து கொடுத்தேன் என்று கூறியுள்ளார். மேலும் எ.சா.2 அவரது குறுக்கு விசாரணையில், "**2 வருடத்திற்கு முன்பு புகார்தாரரை பார்த்தேன் என்றும், 2 வருடமாக எதிரியும், அவரது மனைவியும் தன்னிடம் பேசுவது இல்லை என்றும், காசோலை காணவில்லை என்று எதிரி என்னிடம் கேட்டபோது, சுப்புராஜ் தருவதாக கூறியும், அவர் தரவில்லை என்பதால் எதிரிக்கும், எனக்கும் சண்டை ஏற்பட்டது, அதிலிருந்து அவர்கள் பேசுவதில்லை**" என்று சாட்சியம் அளித்துள்ளார்.



AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.07.31 13:15:07 +0530

10.12. எதிரியின் மாமியார் எ.சா.2 தாவா காசோலைகளை புகார்தாரரிடம் கொடுத்த விபரம் தனக்கு சங்கத்தில் இருக்கும் நபர்கள் மூலம் எதிரி தெரிந்து கொண்டதாக கூறியுள்ள நிலையில், மேற்படி சங்கத்தின் நபர்களை சாட்சியாக விசாரிக்க எதிரி தரப்பில் எவ்வித முயற்சிகளும் எடுக்கவில்லை. புகார்தாரரிடம் எ.சா.2 வட்டி கடன் வாங்கினார் என்றும், அதனை திருப்பி கொடுத்துவிட்டேன் என்று எ.சா.2 கூறியுள்ளார். ஆனால் எந்த தேதியில் எ.சா.2 புகார்தாரரிடம் கடன் வாங்கினார் என்றும், எந்த தேதியில் அந்த கடனை திருப்பி கொடுத்தார் என்பதை குறித்து எ.சா.2 சாட்சியம் அளிக்கவில்லை.

10.13. மேலும் எ.சா.2 புகார்தாரரிடம் கடன் வாங்கவில்லை என்று புகார்தாரர் மறுக்கும்பட்சத்தில், எதிரி தரப்பு வாதத்தை நிரூபிக்கும் சுமையானது எதிரிக்கே உள்ளது. ஆனால் புகார்தாரரிடம் எதிரியின் மாமியார் கடன் வாங்கினார் என்றும், அதனை திருப்பி செலுத்தினார் என்பதை நிரூபிக்கும் வகையில் எதிரி தரப்பில் எவ்வித ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை.

10.14. மேலும் எதிரியின் கையொப்பம் செய்யப்படாத காசோலைகளை புகார்தாரரிடம் கொடுத்தேன் என்று எ.சா.2 கூறும் நிலையிலும், புகார்தாரரை எதிரிக்கு யார் என்று தெரியாது என எதிரி கூறும் நிலையிலும், எதிரியின் கையொப்பமானது புகார்தாரருக்கு தெரிந்திருக்க வாய்ப்புகள் இல்லை என்பதாகும். அவ்வாறு இருக்கும்பட்சத்தில், தாவா காசோலைகளில் எதிரியின் கையொப்பத்தை புகார்தாரர் செய்வதற்கு வாய்ப்புகள் இல்லை. ஆகையால் எதிரி கையொப்பம் செய்யாத காசோலையை புகார்தாரரிடம் எ.சா.2 கொடுத்தார் என்று கூறுவது ஏற்புடையதாக இல்லை என முடிவு செய்கிறது.

10.15. புகார்தாரரிடம் எ.சா.2 பணத்தை கொடுத்து முடித்த பின்பு காசோலையை தரவில்லை என எ.சா2 காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என ஒப்புக்கொண்டுள்ளார். ஆனால் மேற்படி நடவடிக்கையை எதற்காக எடுக்கவில்லை என்று எ.சா.2 எவ்வித விளக்கமும் அளிக்காத காரணத்தினால் எ.சா.2 ன் மீது சந்தேகம் எழுகிறது. மேலும் எதிரியின்


AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.07.31 13:15:15 +0530

காசோலையை எ.சா.2 புகார்தாரரிடம் கொடுத்த விபரம் தெரியவந்தபிறகு காவல் நிலையத்தில் எ.சா.2 மீது எதிரி புகார் கொடுக்க சென்றபோது நீதிமன்றத்தில் பார்த்து கொள்ளும்படி கூறியதாக எதிரி சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் தற்போது வரை எதிரி அவரது மாமியாரான எ.சா.2ன் மீது சட்டரீதியான நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்பது எதிரி தரப்பு சாட்சியங்கள் மூலம் புலப்படுகிறது. மேலும் எ.சா.2 புகார்தாரரிடம் கடன் வாங்கினார் என்றும், காசோலையை கொடுத்தார் என்று எதிரி தரப்பில் நிரூபிக்க எவ்வித சான்றாவணங்கள் தாக்கல் செய்யாத நிலையில் எதிரி தரப்பு வாதத்தின் மீது சந்தேகம் எழுகிறது.

10.16. மேலும் புகார்தாரர் வழக்கு எண்ணை தவறுதலாக கூறியதால் அவர் மீது சந்தேகம் எழுவதாக எதிரி தரப்பில் கூறப்பட்டது. எதிரி புகார்தாரரிடம் கடன் வாங்கவில்லை என்றும், காசோலை கொடுக்கவில்லை என்று அவரது தரப்பில் நிரூபிக்காதபட்சத்தில், மேற்படி காரணத்தினால் மட்டுமே புகார்தாரருக்கு எதிராக வழக்கினை தீர்மானிப்பது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்காது என்று முடிவு செய்கிறது.

10.17. மேலும் கடந்த 04.02.2024ம் தேதியன்று எதிரி புகார்தாரரின் வீட்டிற்கு நேரடியாக வந்து பணம் பெற்றுகொண்டு காசோலையை கொடுத்தார் என்று புகார் மனுவிலும், நிரூபண வாக்குமூலத்திலும் குறிப்பிட்டுள்ளது. மேற்படி தேதியன்று எதிரி புகார்தாரரை சந்திக்கவில்லை என்றும், வேறு இடத்தில் இருந்தார் என்பதை நிரூபிக்கும் சுமையானது எதிரிக்கே உள்ளது. ஆனால் அதனை நிரூபிக்கும் வகையில் எதிரி தரப்பில் எவ்வித சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களை முன்னிலைப்படுத்தவில்லை. ஆகையால் 04.02.2024ம் தேதியன்று புகார்தாரரின் வீட்டில் வைத்து எதிரி புகார்தாரரை சந்தித்து காசோலையை கொடுத்துள்ளார் என்பது உறுதி செய்யப்படுகிறது.

10.18. இவ்வழக்கில், எ.சா.2 எந்த தேதியில் புகார்தாரரிடம் வட்டி கடன் வாங்கினார் மற்றும் எந்த தேதியில் காசோலையை கொடுத்தார் என்பதை



AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.07.31 13:15:26 +0530

நிரூபிக்காத காரணத்தினாலும், தாவா காசோலையை வைத்து புகார்தாரர் பொய் வழக்கு தாக்கல் செய்ததாக கூறும்பட்சத்தில், புகார்தாரர் மீது எதிரி மற்றும் எ.சா.2 எவ்வித சட்ட நடவடிக்கையும் எடுக்காத காரணத்தினாலும், எதிரி புகார்தாரருக்கு பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்ற காரணத்தினாலும், சங்கத்தின் நபர்களை சாட்சியாக விசாரிக்காத காரணத்தினாலும், எ.சா.2 ன் மீது எதிரி சட்டரீதியான நடவடிக்கை எடுக்காத காரணத்தினாலும், எதிரி புகார்தாரரிடம் கடன் வாங்கவில்லை என்பதை நிரூபிக்கும் வகையில் அவரது தரப்பில் எவ்வித ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்ற காரணத்தினாலும், புகார்தாரருக்கு ஆதரவாக இருக்கும் மாற்றுமுறை ஆவண சட்ட பிரிவு 118(a) மற்றும் பிரிவு 139 கீழான சட்டப்படி அனுமானங்களை எதிரி தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் மறுக்கப்படவில்லை என்று முடிவு செய்கிறது. எனவே எதிரி புகார்தாரரிடம் வாங்கிய சட்டப்படியான கடனுக்கு ஆதரவாக தாவா காசோலையை புகார்தாரரிடம் கொடுத்துள்ளார் என்றும், காசோலை தொகையை எதிரி கொடுக்க கடமைப்பட்டவர் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது

10.19. மேலே விவரிக்கப்பட்டுள்ள காரணங்களின் அடிப்படையில் எதிரி மீது மாற்றுமுறை ஆவணசட்டம் பிரிவு 138-ன் படியான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**11. <u>முடிவு:</u>**

எதிரி ஆஜர். முடிவாக, எதிரி மீது பிரிவு 138 மாற்றுமுறை ஆவண சட்டத்தின் கீழ் குற்றவாளி என தீர்மானித்து இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**12.<u>தண்டனை:</u>**

முடிவாக, எதிரி மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம் பிரிவு 138-ன் கீழ் குற்றவாளி என்று முடிவு செய்து, எதிரிக்கு மாற்று முறை ஆவணங்கள் சட்டம் பிரிவு 138-ன் கீழான குற்றத்திற்கு 3 மாதங்கள் மெய்க்காவல் சிறை தண்டனை



AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.07.31 13:15:34 +0530

அனுபவிக்க வேண்டும் என்று பிரிவு 278(2)–ன் B.N.S.S கீழ் தீர்ப்பளிக்கப்படுகிறது. இவ்வழக்கில் சொத்து எதுவும் தாக்கல் இல்லை.

13. <u>குவிமுச பிரிவு 357–ன் கீழ் இழப்பீடு:</u>

தாவா காசோலை தொகையை எதிரி புகார்தாரருக்கு 2 மாத காலத்திற்குள் பிரிவு 395(3) B.N.S.S–ன் கீழ் இழப்பீடாக செலுத்த வேண்டும், தொகை செலுத்த தவறினால் மேலும் கூடுதலாக எதிரி 1 மாதம் காலம் மெய்காவல் சிறை தண்டனை அனுபவிக்க வேண்டும் என்று இந்நீதிமன்றம் உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் சரிபார்க்கப்பட்டு 2026ம் வருடம் ஜீலை மாதம் 31–ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.07.31 13:15:40 +0530

**நீதித்துறை நடுவர்,**
**விரைவு நீதிமன்றம், உத்தமபாளையம்.**

1. <u>புகார்தாரர் தரப்பு சாட்சிகள்:</u>

| | | |
|---|---|---|
| 1 | ம.சா.1 | திரு.சுப்புராஜ் (புகார்தாரர்) |
| 2 | ம.சா.2 | திரு.தங்கவேல் |

2. <u>புகார்தாரர் தரப்பு சான்றவணங்கள்:</u>

| | | |
|---|---|---|
| 1 | ம.சா.ஆ.1 | 01.03.2024 நாளிட்ட 000004 என்ற எண் கொண்ட சிட்டி யூனியன் வங்கி, சின்னமனூர் கிளைக்குரிய ரூ.1,50,000/–க்கான காசோலை அசல் |
| 2 | ம.சா.ஆ.2 | 06.03.2024 நாளிட்டு Funds Insufficients என்ற காரணத்தினால் திருப்பப்பட்ட வங்கி குறிப்புரை அசல் |
| 3 | ம.சா.ஆ.3 | 20.03.2024 நாளிட்ட புகார்தாரர் எதிரிக்கு அனுப்பிய |

| | | |
|---|---|---|
| | | வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக இரசீது அசல் |
| 4 | ம.சா.ஆ.4 | RT443349620IN என்ற பதிவு தபால் 23.03.2024 நாளிட்டு அறிவிப்பினை எதிரி பெற்று கொண்டதற்கான அஞ்சலறிக்கை இணையதள பதிவிறக்க நகல் |
| 5 | ம.சா.ஆ.5 | 27.05.2024 நாளிட்ட வங்கி குறிப்புரை அசல் |
| 6 | ம.சா.ஆ.6 | 28.05.2024 நாளிட்ட சட்ட அறிவிப்பு அலுவலக நகல் |
| 7 | ம.சா.ஆ.7 | RT510793878IN என்ற பதிவு தபால் 29.05.2024 அன்று அறிவிப்பை எதிரி பெற்று கொண்டதற்கான அஞ்சலக இணையதள பதிவிறக்க நகல் |
| 8 | ம.சா.ஆ.8 | 25.07.2024 நாளிட்ட எதிரியின் காசோலை |
| 9 | ம.சா.ஆ.9 | 01.08.2024 நாளிட்ட எதிரியின் காசோலை |
| 10 | ம.சா.ஆ.10 | 09.05.2025 நாளிட்ட வழக்கறிஞர் மூலம அனுப்பிய அறிவிப்பு |
| 11 | ம.சா.ஆ.11 | 15.05.2025 நாளிட்ட எதிரிக்கு கிடைக்கப்பெற்றதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை |

**3. <u>புகார்தாரர் தரப்பு சான்றுபொருள்</u>: இல்லை**

**4. <u>எதிரி தரப்பு சாட்சிகள்:</u>**

| | | |
|---|---|---|
| 1 | எ.சா.1 | திரு.அருண்குமார் |
| 2 | எ.சா.2 | திருமதி.போதுமணி |

**<u>5. எதிரி தரப்பு சான்றாவணம், சான்றுபொருள்: இல்லை:</u>**

AMALANATHA KAMALAKANNAN S

Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.07.31 13:15:46 +0530

**நீதித்துறை நடுவர்,**
**விரைவு நீதிமன்றம், உத்தமபாளையம்.**